பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆடி 17 | சனிக்கிழமை | 02.08.2025 | அதிர்வு 001

## வறுமை ஒழிப்புச் சமர் வடக்கில் முன்னெடுப்பு

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



“போர்முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வடக்கு மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை. எனவே, 06▶



# செம்மணிப் புதைகுழியில் இதுவரை 122 எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு!

## நேற்று புதிதாக 4 அடையாளம்


(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வெள்ளிக்கிழமை புதிதாக 4 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 7 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.** 02▶




## மீட்ட சான்றுப்பொருட்களை காட்சிப்படுத்த நடவடிக்கை

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**



செம்மணி மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களைப் பொதுமக்கள் அடையாளம் காண உதவும் வகையில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி யாழ். நீதிவான் நீதிமன்றில் செம்மணிப் புதைகுழி வழக்கில் நகர்த்தல் பத்திரம் ஊடாக செய்த விண்ணப்பத்தின் பிரகாரம் சான்றுப்பொருட்களைக் காட்சிப்படுத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 06▶




சுவிஸ் நாட்டின் தேசிய நாள் நிகழ்வு கொழும்பில் அந்த நாட்டின் தூதரகத்தின் ஏற்பாட்டில் நட்சத்திர ஹோட்டேல் ஒன்றில் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

அதில் பங்குபற்றச் சென்றிருந்த தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சிவில் சமூகப் பிரதிதிகள் என்று கூறப்படும் தரப்பினரால் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பொறுப்புக் கூறல் சம்பந்தமாக ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு தாங்கள் அனுப்பத் தயாரித்திருக்கும் கடிதம் தொடர்பாக ஒரு தடவை தங்களுக்குள் உரையாடுவோம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதால், அங்கு தமிழரசுக் கட்சி சார்பில் பங்குபற்றச் சென்றிருந்தவர்கள் அதற்கு இணங்கினர்.

சுவிஸ் நாட்டு நிகழ்வை முடித்த பின்னர் ஹோட்டலில் பிறிதொரு பகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் எம்.ஏ.சுமந்திரன், ப.சத்தியலிங்கம் எம்.பி., இராசமாணிக்கம் சாணக்கியன் 06▶





## செம்மணிப் புதைகுழி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணிப் பகுதியில் “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01” மற்றும் ”தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02” என நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 45 நாட்கள் நீதி மன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 27 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 36 நாட்கள் முன்னெடுக்கப் பட்டன.

இதுவரையில் 122 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 112 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

















காலை
முரசு
2
இரண்டாவது ஆண்டு நிறைவு
02.08.2025
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
Bonding Tamils Globally

# அமெரிக்க வரி குறைப்பு குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் மகிழ்ச்சி

இலங்கையின் ஏற்றுமதி பொருள்களுக்கான வரிகளை 20 வீதமாகக் குறைக்க அமெரிக்க அரசாங்கம் எடுத்த முடிவு குறித்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், வரியை 15 வீதமாகக் குறைப்பதை இலங்கை நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்க வரியை 20 வீதமாகக் குறைப்பது, வியட்நாம் மற்றும் பங்களாதேஸ்“டன் இலங்கையை இணைக்கும்.

எனினும் ஏற்றுமதியாளர்களுக்கு உண்மையான ஊக்கத்தை அளிக்கவேண்டுமாயின் இந்த வரி 15 வீதத்துக்கும் குறைவாக இலக்கு வைக்க வேண்டும்.



இது தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1950 | 2025 |
| 07 | 07 |
| 03 | 31 |

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்.வேலாயுதம் குணபாலன்**

(சென் ஜோசப் தொழிநுட்பக் கல்லூரி விரிவுரையாளர்)

**அவர்கள் 31.07.2025 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி வேலாயுதம், வேலாயுதம் சுபத்திரை தம்பதிகளின் பாசமிகு மகனும், சத்தியாவின் அன்புக் கணவரும், கமலேஸ்வரி, உதயஜேஸ்வரியின் அன்புச் சகோதரனும், நிரோஷன், சுபாஷினி (லண்டன்), சுதாஷினி (அமெரிகா), நிஷந்தன் (கனடா) விக்னேஸ்வரன் (பெறாமகன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

நிரஞ்சினி, துளசிசெல்வன் (லண்டன்), சிறிஸ்கந்தராஜா (அமெரிகா), சாம்பவி (கனடா) ஆகியோரின் மாமனாரும் நிகன், நிஷானி, ஜஷ்சானி, ஆவன்யா, சாயிஷ்சன், சாகித் ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 55/25, 3வது ஒழுங்கை, கந்தசாமி கோயில் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.08.2025 திங்கள் கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

077 4342728 / 077 6179433

# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

ஓகஸ்ட் மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போது விற்பனை செய்யப்படும் விலையிலேயே தொடர்ந்தும் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்கள் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 3,690 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது

5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 1,482 ரூபாயுக்கும் 2.3 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை 694 ரூபாயுக்கும் தொடர்ந்து விற்பனை செய்யப்படுமென லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஓகஸ்ட் மாதத்தில் லாப்ஸ் எரிவாயுவின் விலையில் எந்த திருத்தமும் இல்லை என லாப்ஸ் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி நிரோஷன் ஜே. பீரிஸ் தெரிவித்துள்ளார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பி. ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோரும், சிவில் சமூக பிரதிநிதிகள் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன், சிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தாங்கள் மேற்படி விடயம் தொடர்பாக தயாரித்துள்ள கடிதத்தில் சேர்ந்து ஒப்பமிடுமாறு தமிழரசுக் கட்சிக்கு அச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மற்றவர்களும் கோரிக்கை முன் வைத்தார்கள்.

ஆனால் அந்தக் கோரிக்கை என்பது நிபந்தனைகள் போல அமைந்திருந்தன. அவ்விடயம் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் தமிழரசு கட்சிக்கு பின்வரும் விடயங்கள் அப்போது குறிப்பிடப்பட்டுள்ளன.

# ஏற்கனவே கடிதம் எங்களால் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டு விட்டது. அதன் பொருளை மாற்ற முடியாது. தேவையானால் சொல்லாடல்களை – சொற்பதங்களை – மாற்றலாம்.

# அந்தக் கடிதத்தில் மேலும் பலப்படுத்துவதற்கான விடயங்களை சேர்க்கலாம். அத்தகைய கோரிக்கைகளை பரிசீலிக்கலாம். ஆனால் இருக்கின்ற விடயங்களைக் குறைக்கவோ, நீக்கவோ முடியாது.

# எது, எப்படி என்றாலும் தமிழரசுக் கட்சி தனது முடிவை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும். அதற்குப் பின்னர் பொறுத்திருக்க முடியாது.

# இன்றைய தினம் (சனிக்கிழமை) தமிழரசுக் கட்சி தன்னுடைய கட்சிக் கூட்டம் ஒன்றை நடத்துகின்றது. அதன் முடிவில் இவ்விடயம் தொடர்பில் தங்களது தீர்மானத்தை தமிழரசு தெரிவிக்க வேண்டும்.

– இப்படி எல்லாம் நிபந்தனைப் பாணியில் அந்தச் சந்திப்புப் பற்றி பின்னர் கூறியிருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இன்று தமிழரசு கட்சியின் அரசியல் குழுவும், இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான விடயங்களைக் கையாளத் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேர் கொண்ட கட்சியின் குழுவும் ஒன்றாக யாழ்ப்பாணத்தில் கட்சித் தலைமையகத்தில் கூடுகின்றன.

கஜேந்திரகுமார் தரப்பும், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று கூறப்படும் தரப்பினரும் சேர்ந்து முன்வைத்த இந்த நிபந்தனைகள் அடங்கிய கோரிக்கைக்கு தமிழரசுக் கட்சி எவ்விதமாக பதிலளிக்கும் என்பதை இன்று மாலை பெரும்பாலும் அந்தக் கூட்டத்தின் பின்னர் அறியக்கூடியதாக இருக்கும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அண்மையில் சுட்டிக்காட்டியபடி, பொதுவெளியில் தமிழரசுக் கட்சியின் தலைவர்களை மோசமாக விமர்சித்தபடி, மறுபக்கத்தில் சேர்ந்து செயல்பட வாருங்கள் என்று விடும் அழைப்பை தமிழரசு எப்படி ஏற்றுக் கொள்ளும்?

தாங்கள் ஜெனிவாவுக்கு எழுதிய கடிதத்தில் சேர்ந்து ஒப்பமிட வருமாறு நிபந்தனைகளுடன் கஜேந்திரகுமார் அணி இப்போது விடுத்துள்ள அழைப்பை தமிழக அரசுக் கட்சி சாதகமாக பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருப்பதாக எனக்கு தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் பெரும்பாலும் இன்று மாலை பதில் தெரிந்து விடும். அது வரைப் பொறுத்திருப்போம்.

\+ \+ \+

2021 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 10 தமிழ் அரசியல் கைதிகளை சிறைக்குள் முழந்தாளிடச் செய்து, அவர்களின் தலையில் பிஸ்டலை வைத்துச் சுட்டுக் கொல்லப் போவதாக அப்போதைய சிறைச்சாலைத் துறை அமைச்சர் லொஹான் ரத்வத்தை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட இருப்பது பற்றி நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன்.

ஆனால் வழமை போல உயர்நீதிமன்ற வழக்குகள் இழுபடும் போக்கில், நேற்றும் இந்த வழக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஆறு மாதங்கள் தள்ளி, அடுத்த பெப்ரவரியில் விசாரணைக்கு திகதி ஒத்திப் போடப்பட்டிருக்கின்றது.

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சம்பிரதாயபூர்வ நிகழ்வில் சட்டத்தரணிகள், சட்டப் பிரமுகர்கள் கலந்து கொண்ட காரணத்தினால், உயர்நீதிமன்றத்தின் விசாரணைக்கான நேரம் சுருங்கி விட்டது. அதனால் நேற்று இந்த வழக்கின் விசாரணை நடைபெறவில்லை.


வழக்கில் எதிர் மனுதாரரான லொஹான் ரத்வத்தை கடும் சுகவீன முற்றிருக்கின்றார் என நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இனி எப்போது இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு, எப்போது தீர்ப்பு வரும் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

## மீட்ட சான்றுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் அடிப்படையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையில் செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மக்களின் பார்வைக்காக சான்றுப் பொருள்கள் வைக்கப்படவுள்ளன.



நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

[illegible] - BR/433/PC/2025

நீதிமன்றக் கட்டளை

[illegible]

A.A.ANANDARAJAH

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரையில் புத்தகப்பை, சிறுவர்களின் காலணிகள், குழந்தையின் பால் போச்சி, வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப்பொருட்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்றக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றைப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தி அவற்றை அடையாளப்படுத்தக் கூடியவர்கள் நீதிமன்றுக்கோ அல்லது குற்றப் புலனாய்வுத் துறையினருக்கோ தெரிவிப்பதன் ஊடாக விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சான்றுப்பொருட்களைப் பார்வையிட வருவோருக்கான கட்டுப்பாடுகள், நடைமுறைகள் தொடர்பில் இன்று சனிக்கிழமை அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறுமை ஒழிப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கில் இருந்து வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பளை பிரதேசத்திலுள்ள பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், அங்கு உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விஜயத்தின் போது, பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர் சுந்திரலிங்கம் பிரதீப், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

"தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக வடக்கில் இவ்வருடத்தில் 16 ஆயிரம் ஏக்கர் காணியில் தென்னைப் பயிர்ச்செய்கை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது காணிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றது. மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காகவே இப்படியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வறுமை ஒழிப்பு என்பது எமது கொள்கைகளின் பிரதான விடயமாகும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் அதிகளவு வறுமை உள்ளது. இந்நிலைமையில் இருந்து மீள வேண்டும். போரால் அனைத்தையும் இழந்துள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும்.

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வாழ்க்கையில் மாற்றம் இல்லை. வறுமையை ஒழிக்காமல் நாட்டின் அபிவிருத்தி பற்றி சிந்திக்க முடியாது.

தென்னைப் பயிர்ச்செய்கையை சரியாக கையாண்டால் எதிர்காலத்தில் செழிப்பான பொருளாதாரம் இந்தப் பகுதியில் மலரக்கூடும்." – என்றார்.




# பஸ் கட்டணத்தில் திருத்தம் இல்லை

ஓகஸ்ட் மாதத்தில் பஸ் கட்டணத்தில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படாத காரணத்தால், பஸ் கட்டணத்திலும் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டார்.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் மனு தாக்கல்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் உயர்நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள அந்த சங்கம், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் தற்போதும் 1,350 ரூபா என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதுள்ள வாழ்க்கை செலவிற்கமைய பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் 3 வேளை உணவை கூட பூர்த்தி செய்ய முடியாதிருப்பதுடன், அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத உச்ச வறுமையை எட்டியுள்ளார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, 200 வருட காலமாக குறைந்த சம்பளத்தை பெற்று வரும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிற்கான மதிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

அவர்களின் வாழ்க்கை செலவை ஈடு செய்யக் கூடியதும் உழைப்பிற்கான மதிப்பை நிர்ணயித்துக் கொள்ளக் கூடியதுமான ஒரு சம்பள உயர்வை கோரி தங்களது சங்கம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக இலங்கை தொழிலாளர் செங்கொடி சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# ரோஹிதவின் மருமகனுக்குப் பிணை!



புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடியைப் பிணையில் விடுதலை செய்யுமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை உத்தரவிட்டுள்ளது.


விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரோஹித அபேகுண வர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி நேற்று நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைப் பொருத்திய வாகனம் ஒன்றைச் சட்டவிரோ தமாகப் பதிவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக ரோஹித அபேகுணவர்தனவின் மருமகனான தனுஷ்க வீரக் கொடி என்பவர் ஜூலை மாதம் 24ஆம் திகதி காலை மத்து கம நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து பொலி ஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கலா ரசனா - லண்டன்
'சங்கமம்' - கோடை 2025
புலம்பெயர் நாடுகளிலும் தாய் நாட்டிலும்
எமது புதிய தலைமுறையின் கலை ஆளுமைச் சங்கமம்
Kalā Rasanā

யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபம்


02.08.2025 சனி மாலை 4:30 மணி
இசை அரங்கு
ஜெ. மதுஷிகன்
★ ★ ★
'நர்த்தன மாலை'
நுண்கலைமாணி
செல்வி ஆதித்தியா ஜெயபாலன்
★ ★ ★




03.08.2025 ஞாயிறு மாலை 4:30 மணி
இசைக் கச்சேரி
உலக புகழ்பெற்ற தமிழ் இசைக் கலைஞர்
'இசைச் சாகரம்'
மாணிக்கம் யோகேஸ்வரன்
(ஜேர்மனி)
★ ★ ★



'பாரம்பரியம்'
பரதநாட்டியம்
மிதுனன் ரவீந்திரன்
(கனடா)



அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!
(அனுமதி இலவசம்)



Dr.S.Navaratnam
President
0044 7956 579239

Dr.R.Nithyananthan
Secretary
0044 7956 541844

Mr.S.Mahalingam
Co-ordinator
0044 7939 313195

Mr.P.Navendran
0044 7916 134976

Dr.A.Baheerathan
0044 7957 682083

Mr. A. Bavaharan
0044 7782 257036

Mr. I.Somasundaram
0044 7711 044509

Mr. S.Thambiah
0044 7931 330793

தொடர்புகளுக்கு: 0767733348 / 0764674538

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித் துறையை மேம்படுத்தல்

நீதித்துறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு திறமையான நீதித்துறை சேவையை வழங்குவது அவசியம் என்று புதிதாகப் பதவியேற்றுள்ள பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன நேற்று முன்தினம் வலியுறுத்தியிருக்கின்றார்.

இந்த இலக்கை அடைவதற்கான ஒரு முக்கிய படியாக இலங்கை முழுவதும் முழு நீதித்துறை செயல்முறையையும் டிஜிட்டல் மயமாக்குவதை விரைவுபடுத்துவதாக அவர் மேலும் உறுதியளித்தார்.

இலங்கையின் 49 ஆவது பிரதம நீதியரசராக அவர் அதிகாரபூர்வமாக பொறுப்பேற்றமையைக் குறிக்கும் வகையில் உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சம்பிரதாய வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

டிஜிட்டல் மயமாக்கல் முயற்சி நீதித்துறையின் செயல்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், சில நீதிமன்ற அலுவலகங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகளை ஒழிப்பதற்கான ஒரு பொறிமுறையாகவும் செயல்படும் என்று பிரதம நீதியரசர் சூரசேன குறிப்பிட்டார்.

நீதித்துறை நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையை விரைவுபடுத்த ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, அரசாங்கம் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குகிறது என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

இந்தச் சீர்திருத்தங்களை விரைவாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக, நீதி அமைச்சர் மற்றும் இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுடன் தாம் ஏற்கனவே கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளார் என்றார் அவர்.

பிரதம நீதியரசரின் கூற்றுப்படி, நீதிமன்ற நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்குவது நீதிக்கான அணுகலை ஒழுங்குபடுத்துவதோடு அதன் மூலம் பொதுமக்களுக்கும் சட்ட சமூகத்திற்கும் கணிசமான நிவாரணத்தை வழங்கும்.

டிஜிட்டல் தளங்கள் மூலம் மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை நீதித்துறையின் செயல்பாடுகள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிக்க உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விஞ்ஞானரீதியாகவிரைந்துமாற்றமடைந்து வரும் உலகத் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப நீதித்துறையும் தன்னை இயல்பாக்கி கொள்வது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

இலங்கையின் நீதித்துறை அதன் தாமதத்தினால் கெட்ட பெயரைச் சம்பாதித்து உள்ளது. நீதித்துறையின் அதீத தாமதங்களைக் களைவதற்கு இந்த டிஜிட்டல் மயமாக்கல் முயற்சி ஓரளவு உதவக்கூடும்.

தொழில்நுட்ப ரீதியாக இந்த விடயங்களை விரைந்து செய்யும் அதே நேரத்தில், நீதித்துறையின் அடிப்படை பண்பியல்புகளில் நேர்ந்துள்ள ஒழுக்கச் சீர்கேடுகளை ஒழுங்குபடுத்துவதிலும் புதிய பிரதம நீதியரசர் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தில் ஏற்படுகின்ற தேவையற்ற காலதாமதங்கள், விசாரித்து முடித்த வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதில் மேற்கொள்ளப்படும் கால இழுபறிகள், விசாரணைகளின் பின்னர் தீர்ப்புக்கள், உத்தரவுகள் வழங்குகையில் அவற்றுக்கான சட்டக் காரணங்களை உயர் நீதிமன்றமே பல சமயங்களில் முன் வைக்காமல் விடுகின்றமை போன்ற விடயங்களைத் திருத்துவதிலும் புதிய பிரதம நீதியரசர் கவனம் செலுத்த வேண்டும்.

# 71 ஆவது தேசிய விருதுகள் அறிவிப்பு; ‘பார்க்கிங்’ திரைப்படத்துக்கு 3 விருதுகள்



71 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான இந்த விருதுகள் பட்டியலில், சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான தேசிய விருது ‘பார்க்கிங்’ திரைப்படத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தப் படத்தில் நடித்த எம்.எஸ். பாஸ்கருக்கு சிறந்த உறுதுணை நடிகர் விருதும், இப்படத்துக்கு சிறந்த திரைக்கதைக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

‘பார்க்கிங்’ திரைப்படத்தை ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கியிருந்தார். இப்படத்தை ஃபேஷன் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்தது. ஹரிஷ் கல்யாண், எம்.எஸ்.பாஸ்கர், இந்துஜா, ராமா ராஜேந்திரா, இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சாம் சி.எஸ். இசையமைத்திருந்தார். விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இந்தப் படம் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

‘பார்க்கிங்’ போன்ற சாதாரண பிரச்சினைகள்தான் மனித மனங்களின் அடி ஆழத்தில் இருக்கும் அகம்பாவத்தையும் சிறுமைகளையும் கீழ்மைகளையும் தோண்டி எடுத்து விஸ்வரூபமாக வெளிப்பட வைக்கின்றன என்பதைக் கச்சிதமாக உணர்த்தியிருப்பார் அறிமுக இயக்குநர் ராம்குமார் பாலகிருஷ்ணன். இப்படத்துக்கு சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான தேசிய விருது, இதில் நடித்த எம்.எஸ்.பாஸ்கருக்கு சிறந்த உறுதுணை நடிகருக்கான தேசிய விருது மற்றும் சிறந்த திரைக்கதைக்கான தேசிய விருது ஆகியவை அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது ஜி.வி.பிரகாஸ்’க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வெங்கி அட்லூரி இயக்கத்தில் உருவான ‘வாத்தி’ படத்துக்காக அவருக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் தனுஷ் நாயகனாக நடித்திருந்தார்.

சிறந்த நடிகருக்கான தேசிய விருது பாலிவுட் நடிகர் ஷாருக்கானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அட்லீ இயக்கிய ‘ஜவான்’ படத்துக்காக அவருக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த மலையாள திரைப்படமாக ‘உள்ளொழுக்கு’ அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் நடித்த ஊர்வசிக்கு சிறந்த உறுதுணை துணை நடிகை விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த ஒலி அமைப்புக்கான தேசிய விருது ‘அனிமல்’ படத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த தயாரிப்புக்கான தேசிய விருதை மலையாளப் படமான ‘2018’வென்றுள்ளது. சிறந்த தெலுங்கு திரைப்படத்துக்கான விருதை ‘பஹவந்த் கேசரி’ வென்றுள்ளது.

# கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை; ஸ்டாலினை நலம் விசாரித்த பின் வைகோ கருத்து



2026 தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் எனவும் கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினை வைகோ நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரேமலதா விஜயகாந்த், ஓ.பி.எஸ். என வரிசையாக முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலினை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் அவரின் மகன் துரை வைகோ ஆகியோர் சந்தித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்து வீடுதிரும்பியுள்ள நிலையில், அவரை சந்தித்து நலம் விசாரிக்க அவரின் வீட்டிற்கு சென்றிருந்தனர் என கூறப்படுகிறது. சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, முதல்வரின் உடல்நலம் குறித்து வைகோ விசாரித்தார் என சொல்லப்படுகிறது.

இதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“மு.க.முத்து மறைவு குறித்து துக்கம் விசாரித்தேன். அதோடு, முதல்வர் ஸ்டாலினின் உடல்நலம் குறித்தும் விசாரித்தேன். அவர் மருத்துவமனையிலும் மக்கள் பணி தான் செய்து கொண்டிருந்தார்.

கவின் படுகொலையில் அரசு எடுத்த நடவடிக்கையை வரவேற்கிறேன். பொலிஸ் என்ன தான் உடனுக்குடன் கைது நடவடிக்கை எடுத்தாலும், ஆணவக்கொலைகளை தடுக்க கடும் சட்டம் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. இது குறித்து முதல்வரிடம் வலியுறுத்தினேன்.

2026 தேர்தலில் தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை.” என்றார்.



# அமெரிக்காவில் பிறந்தது உலகின் வயதான குழந்தை

30ஆண்டுகளுக்கும்மேலாகஉறைந்த நிலையில் இருந்த ஒரு கருவில் இருந்து குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

அமெரிக்காவின் ஒஹியோவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு உறைந்த நிலையில் வைக்கப்பட்ட ஒரு கருவில் இருந்து குழந்தை ஒன்று பிறந்துள்ளமை உலகில் ஒரு புதிய சாதனையாக பாரக்கப்படுகின்றது.

தாடியஸ் டேனியல் பியர்ஸ் என பெயரிடப்பட்டுள்ள இந்த குழந்தை உலகின் மிக வயதான குழந்தை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை 26 ஆம் திகதி, 30 ஆண்டுகளுக்கு முன்பு 62 வயதான நபர் ஒருவரிடம் இருந்து எடுக்கப்பட்ட கருவைப் பயன்படுத்தி இந்த குழந்தை பிரசவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவு; 6 மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல்

மியன்மாரில் 4 ஆண்டுகளாக உள்ள இராணுவ அவசர நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அடுத்த 6 மாதங்களுக்குள் நாடாளுமன்ற தேர்தலை நடத்தப்படும் என இராணுவ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சித்தலைவர் மின் ஆங் ஹிலியாங் செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தேர்தலில் மோசடி நடைபெற்றதால் தான் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

எனவே நேர்மையான முறையில் தேர்தல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படும்.

இதனால் அடுத்த 6 மாதங்களுக்குள் நாடாளுமன்ற தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக 4 ஆண்டாக உள்ள இராணுவ அவசர நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மியான்மரில் கடந்த 2020 இல் நடந்த தேர்தலில் ஆங் சான் சூகியின் கட்சி பெரிய வெற்றி பெற்ற நிலையில் தேர்தலில் மோசடி நடந்ததாக கூறி 2021 ஆம் ஆண்டு அரசை கலைத்துவிட்டு இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

அவசர நிலையை அறிவித்து இராணுவத் தளபதி மின் ஆங் ஹிலியாங் அதிகாரத்தை கைப்பற்றினார். இதையடுத்து ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அர்ச்சுனாவின் எம்.பி. பதவிக்கு எதிரான வழக்கு; ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய காலக்கெடு!

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யுமாறு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு, நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதியான இராமநாதன் அர்ச்சுனா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி செனானி தயாரத்ன, இந்த மனு மீதான ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யக் கால அவகாசம் வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.



அதன்படி, நான்கு வாரங்களுக்குள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய நீதியரசர்கள் அமர்வு கால அவகாசம் வழங்கியதுடன், அதில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவித்தது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு முயற்சி

## முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர குற்றச்சாட்டு

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடர் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காகவா முப்படைகளின் முன்னாள் அதிகாரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற சந்தேகம் காணப்படுகின்றது. செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றார்கள்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரத் வீரசேகர தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் முப்படையினர் சட்டத்துக்கு விரோதமான முறையில் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை



எடுக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படும்போது அவர்களை சிறைச்சாலையில் ஏனைய கைதிகளுடன் ஒன்றாக அடைக்காமல், வீட்டுக்காவலில் வைக்க முடியும். ஆனால், கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் தளபதி ஏனைய கைதிகளுடன் ஒன்றாக சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில்தான் கடற்படையின் முன்னாள் தளபதி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்காகவா முப்படைகளின் முன்னாள் அதிகாரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தை இராணுவத்தின் மீது சுமத்துவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றார்கள். விடுதலைப்புலிகள் அமைப்பினர் சித்திரவதை முகாம்களை நடத்தினர். விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைவதற்கு இணக்கம் தெரிவிக்காத தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம்." – என்றார்.

# தேரர் ஒருவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களை பார்ப்பதற்காக வருகை தந்த தேரர் ஒருவர் யாழில் உள்ள விகாரையில் உயிரிழந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பதுளை வீதி, பசறையைச் சேர்ந்த வனபதுளே சரணதர தேரர் (வயது 72) என்பவராவார்.

மேற்படி தேரர் யாழில் உள்ள ஆலயங்களை பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு விகாரையில் தங்கி இருந்த நிலையில், நேற்று காலை சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.




# செம்மணிப் புதைகுழியைத் திங்களன்று பார்வையிடும் மனித உரிமை ஆணைக்குழு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நாளைமறுதினம் யாழ். செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிப் பிரதேசத்தைப்

பார்வையிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்கள் மற்றும் இரண்டு பணிப்பாளர்களுடன் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலர்கள் அடங்கிய குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குழுவினர் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காணாமல்போனோர் அலுவலக அதிகாரிகளுடனும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான நிலையத்தின் பிரதிநிதிகளுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு நகர்ப் பிரதேசத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த ரி.56 துப்பாக்கி மீட்பு!

## ரவைகள், மகசீன்களும் நேற்றுக் கைப்பற்றப்பட்டன



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பிரதேசத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி.56 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் ரவைகள், மகசீன் என்பவற்றை நேற்று வெள்ளிக்கிழமை இரவு விசேட அதிரடிப் படையினர் மீட்டுத் தங்களிடம் ஒப்படைத்துள்ளனரென மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தெரிவித்தார்.

லயன்ஸ் கிளப் வீதியில் உள்ள காணி ஒன்றில் புதிதாக வீடு கட்டுமானப்பணி இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று இரவு 10.00 மணியளவில் அங்கு மலசல கூடத்திற்கு குழி அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டும் போது பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி இருப்பதை கண்டு விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும், 50 துப்பாக்கி ரவைகள் மற்றும் 2 மகசீன்களை மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட ஆயுதங்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# தென்னை முக்கோண வலயம் தொடர்பில் வவுனியாவில் அமைச்சரின் தலைமையில் விசேட மீளாய்வுக் கூட்டம்

**(கி.வசந்தன்)**

வடமாகாண தென்னை முக்கோண வலயத்தின் வவுனியா மாவட்டத்தில் மேற்கோள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர்தலைமையில்வவுனியாமாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயபட்டதுடன், தென்னை பயிர் செய்கையாளர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாண தென்னை முக்கோண வலயம் என்ற திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்கு கால் ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரையான காணிகளுக்கு தென்னை பயிர்கள் மானியமாக வழங்கப்படுகின்றது. அத்துடன், அதற்கான நீர் விநியோக செயற்பாடுகளுக்காக ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் பணமும், தென்னைப் பயிருக்கான உரமும், இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதி அமைச்சர்களான சுந்தரலிங்கம் பிரதீப், உபாலி சமரசிங்க, மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர, அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள், தென்னை அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டிருந்தனர்.











# ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள்

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலை கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ்,மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை , அவரது வீட்டிற்கு ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.








# ஊடகவியலாளர் நிலக்சனின் நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டிலும்




படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளரும் யாழ் மாணவர் பேரவை யின் தலைவருமான சகாதேவன் நிலக் சனின் 18 ஆம் ஆண்டு நினைவேந் தல் நேற்று மாலை யாழில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட் டில் அக் கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் அனுஷ்டிக் கப்பட்டது.

இத் போது நிலக்சனின் திருவுருவ படத்திற்கு சுடரேற்றி மலர்மாலை அணி வித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினருமான செல்வ ராசா கஜேந்திரன் தலைமையில் நடை பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ் வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆதர வாளர்கள், பொதுமக்கள் எனஒ பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி யிருந்தனர்.




# புதுக்குடியிருப்பில் அடுத்த மாதம் நடைபெறும் தெங்கு தின விழாவில் ஜனாதிபதி பங்கேற்பார்

**(ந.லோகதயாளன்)**

செப்ரெம்பர் இரண்டாம் திகதி இடம் பெறும் நிகழ்வில் பங்குகொள்வதற் காக ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க முல்லைத்தீவிற்கு வருகை தர வுள்ளார்.

சர்வேச தெங்கு தின விழா இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடி யிருப்பில் இடம்பெறவுள்ளது. இந்த விழா வில் பங்குகொள்வதற்காகவே ஜனாதி பதி அநுரகுமார திஸநாயக்க முல்லைத் தீவிற்கு வருகை தரவுள்ளார்.

நாட்டின் தெங்கு உற்பத்தியை அதிக ரிக்கும் துரித முயற்சி தற்போது வடக்கிலும் முன்னெடுக்கப்படும் சூழலில் அதனை மேலும் முன்கொண்டு செல்லும் நோக் கிலேயே ஜனாதிபதியின் வருகை அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் கத்தி முனையில் பஸ்ஸை வழி மறித்து ஒருவரைக் கடத்திய போதைப்பொருள் மாபியாக்கள்




**(மன்னார் நிருபர்)**

மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக சென்று மீண்டும் தனியார் பஸ்ஸில் வீடு திரும்பிய நபர் ஒருவரை மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி காட்டாஸ்பத்திரி பகுதியில் வைத்து கூரிய ஆயுதங்களுடன் கடத்திச் சென்ற சம்பவம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தல் கடத்தல் சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பான காணொளியும் வெளியாகி உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றிற்காக முன்னிலையாகிய நிலையில்,வழக்கு விசாரணை முடிவடைந்து மாலை மன்னாரில் இருந்து தலைமன்னார் நோக்கி தனியார் பஸ்ஸில் பயணித்துள்ளார்.

இதன் போது மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி,காட்டாஸ்பத்திரி பகுதியில் அந்த பஸ்ஸை வழிமறித்த ஒரு குழுவினர் பஸ்ஸில் ஏறி, கூரிய ஆயுதங்களினால் பயணிகளை அச்சுறுத்தி, அந்த நபரைத் தாக்கி, பஸ்ஸில் இருந்து இறக்கி மோட்டார் சைக்கிலில் கத்தி முனையில் கடத்தி சென்றுள்ளனர்.

பின்னர் அந்த நபரை நடுக்குடா காட்டுப்பகுதிக்குள் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கிய நிலையில் விடுத்தனர் எனவுன் கூறப்படுகிறது.

காட்டாஸ்பத்திரி கிராமத்தில் நீண்ட காலமாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்ற குழுவினரே இந்த நபரைக் கடத்தினர் எனக் கூறப்படுகின்றது

காட்டாஸ்பத்திரி கிராமத்தில் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதும் பேசாலை பொலிஸார் அசமந்த போக்குடன் நடந்து கொள்கின்றனர் எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# மட்டு. பெரியபோரதீவு தொலைத்தொடர்புக் கோபுரத்தின் 44 பற்றரிகளைத் திருடி விற்றவரும் வாங்கியவரும் கைது

**(கனகராசா சரவணன்)**



களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பெரியபோரதீவு தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்த சுமார் 14 இலட்சம் ரூபா பெறுமதியான 44 பற்றரிகளை திருடி விற்பனை செய்தவர் மற்றும் அதனை வாங்கிக் கொண்ட சம்மாந்துறையைச் சேர்ந்த பழைய இரும்பு வியாபரி ஆகிய இருவரை நேற்று வெள்ளிக்கிழமை காலையில் களவாஞ்சிக்குடி பகுதியில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பில் தாங்கள் சிறிய ரக வாகனம் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர் எனக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்த பற்றரிகளை நேற்று வெள்ளிக்கிழமை அங்கு கடமையாற்றி வந்த ஒருவர் பழைய இரும்பு விற்பனை வர்த்தகர் ஒருவருக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

இது குறித்துப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து அந்த பற்றரிகளுடன் வந்த வாகனத்தைகளுவாஞ்சிக்குடிபகுதியில்வைத்து பொலிஸார் சுற்றிவளைத்து மறித்தனர். வாகனத்தை சோதனை செய்த போது திருடப்பட்ட பற்றரிகளை எடுத்து செல்வதை கண்டுபிடித்தனர். அந்த வாகன சாரதியைக் கைது செய்தமையுடன் வாகனத்தையும் 44 பற்றரிகளையும் கைப்பற்றினர்.

தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்த பற்றரிகளை திருட்டுதனமாக விற்பனை செய்தவர் என்ற சந்தேகத்தில் அங்கு கடமையாற்றி வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணையின் பின்னர் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பெரும் குற்ற தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# செம்மணி மனிதப் புதைகுழி எச்சங்கள் தொடர்பில் நீதியான, சர்வதேசத் தர விசாரணை மிக அவசியம்

## அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் ஆறு. திருமுருகன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் உலகின் கவனத்தை ஈர்த்து, மிகப் பெரிய அத்தாட்சியாக அமைந்துள்ளன. இந்த விவகாரம் சர்வதேச விசாரணையாக மாறி, எமது மண்ணில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக உலகம் தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகன் வலியுறுத்திக் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புகள் மற்றும் எலும்புக்கூடுகள் தொடர்ந்து கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வளவு பேரை இழந்து, காணாமல் போனவர்களின் சூழலில் தமிழ்ச் சமூகம் கவலையுடன் உறைந்திருக்கிறது.

இந்தப் புதைகுழி அதிர்ச்சியையும் மிகுந்த துயரத்தையும் அளித்துள்ளது. எனவே, செம்மணி புதைகுழி விவகாரத்தில் நீதியான மற்றும் சர்வதேச தரத்திலான விசாரணை நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு, தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.



இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள நீதித்துறை அதிகாரிகளை நன்றியுடன் பாராட்டும் அதே வேளையில், இவ்விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டும். பச்சிளம் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என வேறுபாடின்றி இவ்வளவு கொடூரமாகப் புதைக்கப்பட்டவர்களின் துயரச் செய்தி உலகத்தை உலுக்கியுள்ளது.

இந்த இரக்கமற்ற, மன்னிக்க முடியாத சம்பவத்திற்கு இலங்கையில் வாழும் மனிதநேய அமைப்புகள், சமயப் பெரியோர்கள் மற்றும் ஈரநெஞ்சம் கொண்ட அனைவரும் நேர்மையாகக் குரல் கொடுத்து, செம்மணி விவகாரத்தில் நீதியான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்.

போர் முடிந்து பல ஆண்டுகள் ஆன பின்னரும், எமது சமூகம் துன்ப நிலையில் தொடர்கிறது. காணாமல் போனோரின் தாய்மார்கள் கண்ணீர் வடிப்பதும், வெளிநாட்டுத் தூதுவர்களிடம் மன்றாடி அழுவதும், அவர்கள் காட்சிப்பொருளாக மட்டும் கருதப்படுவதும் தொடர்கின்றன. ஆனால், இதற்கு நிரந்தரத் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை.

செம்மணி புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள மிகப்பெரிய அத்தாட்சியாகும். இவ்விசாரணை சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டு, எமது மண்ணில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறேன். – என்றார்.




# காணாமல் ஆக்கப்பட்ட முஸ்லிம்கள் குறித்தும் விசாரிக்க காத்தான்குடி நகரசபை கோரிக்கை

(எஸ். சினீஸ் கான்)

கடந்த 12.07.1990 அன்று புனித ஹஜ் பயணத்தை முடித்துக்கொண்டும் மற்றும் பல தேவைகளோடும் காத்தான்குடி நோக்கி பயணித்த அப்பாவி முஸ்லிம்கள் கடத்தி, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக தற்போதைய அரசாங்கம் உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியை பெற்றுத்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் காத்தான்குடி நகர சபையின் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறவேற்றப்பட்டது.

சபையின் இரண்டாவது அமர்வில் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் ஈ.எம்.றுஸ்லின் இது தொடர்பான பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.

அந்தப் பிரேரணையை சபையின் தவிசாளர் தலைமையில் உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் நகர சபை ஊடாக ஜனாதிபதிக்கு விரைவில் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.



# மாளிகாவத்தை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் பெட்டியின் கழிப்பறையில் பெண் சிசுவின் சடலம்

மாளிகாவத்தை ரயில் நிலயத்தில் நிறுத்தப்பட்டிருந்த 8346ஆம் எண் ரயிலின் மூன்றாம் வகுப்பு பெட்டியின் கழிப்பறையில் பெண் சிசுவின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

சடலமாக கண்டுபிடிக்கப்பட்ட அந்த சிசுவுக்கு சுமார் 3 நாள்கள் வயதாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரவு பயணத்தை முடித்து புத்தளத் திலிருந்து கல்கிஸை நோக்கி வந்த ரயில் மாளிகாவத்தை நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அதைப் பரா மரிக்கச் சென்ற தொழிலாளர்கள் குழு வினர், மூன்றாம் வகுப்பு பெட்டியிலி ருந்து கடும் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்து சோதனை செய்தபோது, ஒரு பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

தெமட்டகொட பொலிஸார் உடனடி யாக சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை ஆரம்பித்தனர். அளுத்கம நீதவானும் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்து சடலத்தையும் ரயில் பெட்டியையும் பார்வையிட்டார்.

சிசுவின் சடலம் பிரேத பரிசோத னைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ள துடன், சம்பவத்திற்கான காரணம் மற்றும் குற்றவாளியை கண்டறிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# செம்மணி விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்



செம்மணி மயானத்துக்கு முன்பாக இடம் பெற்ற விபத்தில் படுகாயம் அடைந் திருந்த நபர் ஒருவர் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் விதா னையார் வளவு மீசாலை கிழக்கைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணசாமி லிங் கேஸ்வரன் (வயது 62) என்பவராவார்.

கடந்த திங்கட்கிழமை காலை அவர் மோட்டார் சைக்கிளில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்று கொண்டி ருந்த போது செம்மணி மயானத்துக்கு முன்பாக சைக்கிள் ஒன்றை முந்தி செல்ல முற்பட்டபோது அதனுடன் மேதுண்டதில் படுகாயம் அடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற வர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சு வெற்றி

## நிதி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு



அமெரிக்காவுடனான வர்த்தக பேச்சு வார்த்தைகளில் இலங்கை தனது விரும்பிய இலக்குகளை அடைந்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் வைத்தியர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வரிகளை 20 வீதமாக குறைப்பது குறித்து நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிராந்தியத்தில் உள்ள போட்டியாளர்களைப் போன்ற ஒரு கட்டண விகிதத்தை அடைவதே இந்தப் பேச்சு வார்த்தைகளின் முக்கிய நோக்கமாகும்.

பல்வேறு துறைகளில் இலங்கையின் சந்தைப் பங்கைப் பராமரிக்க இது அவசியமானது.

பேச்சுவார்த்தைகளின் வெற்றி காரணமாக, எதிர்காலத்தில் மேலும் பல வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது." என்றார்.

# அமெரிக்காவால் தீர்வை வரி குறைக்கப்பட்டமை மகிழ்ச்சி

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

"இலங்கைக்கான பரஸ்பர தீர்வை வரியை அமெரிக்க ஜனாதிபதி 20 சத வீதமாக குறைத்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். 20 சதவீத தீர்வை வரி என்பது அரசியல் வெற்றியல்ல, நாட்டின் வெற்றி, நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு வழியாகும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எந்த அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் ஸ்ரீ லங்கா என்பதை முன்னிலைப்படுத்தியே செயற்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 44 சதவீத தீர்வை வரியானது எமது வலய நாடுகளுடன் வர்த்தக ரீதியில் போட்டியிடுவதற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தால் பொருளாதார ரீதியில் இலங்கை மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்க நேரிட்டிருக்கும்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி இலங்கை உட்பட சகல நாடுகளுக்கும் ஒப்பீட்டளவில் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஆடை உற்பத்திகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் போது இலங்கைக்கு இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் போட்டித்தன்மை காணப்பட்டது. இலங்கையை காட்டிலும் ஆசிய நாடுகளுக்கு பரஸ்பர தீர்வை வரியானது குறைவாக காணப்படும் பட்சத்தில் வர்த்தக பற்றாக்குறையில் நெருக்கடி ஏற்படும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம்.



இலங்கைக்கு 20 சதவீத பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் ஆசிய வலய நாடுகளின் வர்த்தக போட்டித்தன்மையுடன் ஒப்பிடுகையில் இலங்கை முன்னேற்றகரமான தன்மையில் உள்ளமை வரவேற்கத்தக்கது.

வரி குறைப்பு தொடர்பில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்கள் அனைவருக்கும் நாட்டு மக்கள் கௌரவமளிக்க வேண்டும். இது கூட்டு வெற்றி என்றே குறிப்பிட வேண்டும். தீர்வை வரி விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படவில்லை.

20 சதவீத தீர்வை வரி என்பது அரசியல் வெற்றியல்ல, நாட்டின் வெற்றி, நாடு என்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு வழியாகும். நாடு என்ற அடிப்படையில் வலய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். மூடிய நிலையில் இருந்துக் கொண்டு தற்போது செயற்பட முடியாது.

இந்தியாவுடன் இலங்கை வர்த்தக தொடர்பினை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு 25 சதவீத வரியும், இலங்கைக்கு 20 சதவீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். பொருளாதார பரிமாற்றத்தின் உச்சபயனை இருதரப்பும் பெற்றுக்கொள்ள வேண்டும்." என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2025




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு, செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டுக்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்துக்காகச் செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம்.இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.

உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2025




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும். இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# சிறையில் இருந்து சிறைச்சாலை வாகனத்தில் உள்ளூராட்சி சபை அமர்வுக்கு வந்த உறுப்பினர்







**(வவுனியா நிருபர்)**

பொலிஸ் பாதுகாப்புடன் சிறைச்சாலை வாகனத்தில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை அமர்வுக்கு உறுப்பினர் ஒருவர் அழைத்து செல்லப்பட்ட சம்பவம் ஒன்று வவுனியாவில் பதிவாகியுள்ளது.

சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரே இவ்வாறு அழைத்து வரப்பட்டிருந்தார்.

கடந்த 11 ஆம் திகதி வவுனியா, கூமாங்குளம் பகுதியில் ஒருவர் மரணமடைந்தமையை அடுத்து இடம்பெற்ற அமைதியின்மை காரணமாக 5 பொலிஸார் காயமடைந்தனர். பொலிஸாரின் இரு மோட்டர் சைக்கிள்கள், கப் ரக வாகனம் ஒன்றும் சேதமானது.

இச் சம்பவம் தொடர்பில 7 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தின் போது அப்பகுதியில் மக்களுடன் நின்ற தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் வாக்கு மூலம் பெறுவற்காக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அவர் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சபை அமர்வுக்காக நீதிமன்ற அனுமதி பெற்று அவர் பொலிஸார் மற்றும் சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் சிறைச்சாலை வாகனத்தில் அமர்வுக்காக அழைத்து வரப்பட்டு அமர்வில கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். அமர்வு முடிந்ததும் மீண்டும் அதே வாகனத்தல் அழைத்து சென்று சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.